சுருக்கம்

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை – நகர்புறப் பகுதிகளில் உள்ள குழந்தைகள் பாதுகாப்பினை உறுதி செய்ய ஏதுவாக நகர பஞ்சாயத்து, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் மண்டல அளவிலான குழந்தை பாதுகாப்பு குழுக்களை அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் [சந.5(1)] துறை

அரசாணை (நிலை) எண்.31

நாள்: 22.09.2020
சார்வரி, புரட்டாசி 06,
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.10, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் [சந.8(1)] துறை, நாள் 10.01.2013.
2. அரசாணை (நிலை) எண்.215, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் [சந.8(1)] துறை, நாள் 19.07.2012.
3. அரசாணை (நிலை) எண்.15, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் [சந.8(1)] துறை, நாள் 11.03.2015.

மீண்டும் படிக்க:

4. சமூக பாதுகாப்பு ஆணையரின், கடித எண்.2662/மா.கு.பா.ச/2019, நாள் 25.02.2020.

------

ஆணை:

மேலே ஒன்று முதல் மூன்று வரையுள்ள அரசாணைகளில் முறையே ஊரகப் பகுதிகளில் கிராம, வட்டார மற்றும் மாவட்ட அளவிலான குழந்தை பாதுகாப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் சமூக பாதுகாப்பு ஆணையர் தமிழகத்தில் 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி சுமார் 48.45 சதவீதம் மக்கள் நகர்புற பகுதிகளில் வசிக்கின்றனர் என்றும், எனவே நகர்புற பகுதிகளில் இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 சிறந்த முறையில் செயல்படுத்துவதற்கும் நகர்புறத்தில் உள்ள குழந்தைகள் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கும் குழந்தை பாதுகாப்பு குழுக்களை அமைக்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

(த.பி.பா.)

3. சமூக பாதுகாப்பு ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று நகர்புறப் பகுதிகளில் குழந்தை பாதுகாப்பு குழுக்களை பின்வருமாறு அமைத்தும், அவற்றின் பணிகளை கீழ்க்கண்டவாறு வரையறை செய்தும் ஆணையிடுகிறது:-

**(i)** நகர பஞ்சாயத்து அளவிலான குழந்தை பாதுகாப்பு குழு
**(Child Protection Committee at Town Panchayat Level)**

| | | |
|---|---|---|
| 1 | நகர பஞ்சாயத்து தலைவர் | தலைவர் |
| 2 | செயல் அலுவலர் | உறுப்பினர் – செயலர் |
| 3 | 3 நகர பஞ்சாயத்து உறுப்பினர்கள் (தலைவர் அவர்களால் சுழற்சி முறையில் நியமனம் செய்தல் வேண்டும்) | உறுப்பினர்கள் |
| 4 | கிராம நிர்வாக அலுவலர் | உறுப்பினர் |
| 5 | உயர்நிலை (அ) மேல்நிலை பள்ளியின் தலைமையாசிரியர் அப்படியில்லையெனில் நடுநிலைப்பள்ளி (அ) தொடக்கப்பள்ளியின் தலைமையாசிரியர் (அ) தொடர்புடைய பள்ளியின் ஆசிரியர் | உறுப்பினர் |
| 6 | இரண்டு குழந்தை பிரதிநிதிகள் (தலைவரால் நியமனம் செய்யப்பட வேண்டும்) | உறுப்பினர்கள் |
| 7 | மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் பிரதிநிதி | உறுப்பினர் |
| 8 | மேற்பார்வையாளர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டம் | உறுப்பினர் |
| 9 | சுகாதார ஆய்வாளர் மற்றும் கிராம சுகாதார செவிலியர் / நகர்புற சுகாதார செவிலியர் (தலைவரால் நியமனம் செய்யப்பட வேண்டும்) | உறுப்பினர்கள் |
| 10 | தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பிரதிநிதி (கிராமத்தில் செயல்படும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பிரதிநிதி தலைவரால் நியமனம் செய்யப்பட வேண்டும்) | உறுப்பினர் |
| 11 | கிராமத்தில் செயல்படும் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்( தலைவரால் நியமனம் செய்யப்பட வேண்டும்) | உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 12 | உள்ளூர் காவல் நிலைய குழந்தை நல காவல் அலுவலர் | உறுப்பினர் |
| 13 | உள்ளூர் இளைஞர் நல குழு பிரதிநிதி / நேரு யுவகேந்திரா பிரதிநிதி (தலைவரால் நியமனம் செய்யப்பட வேண்டும்) | உறுப்பினர் |
| 14 | குழந்தை பராமரிப்பு நிறுவன பிரதிநிதி (மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலரால் பரிந்துரை செய்யப்பட வேண்டும்) | உறுப்பினர் |

**(ii)** நகராட்சி அளவிலான குழந்தை பாதுகாப்பு குழு
**(Child Protection Committee at Municipal Level)**

| | | |
|---|---|---|
| 1 | நகராட்சி தலைவர் | தலைவர் |
| 2 | நகராட்சி ஆணையர் | உறுப்பினர் – செயலர் |
| 3 | குழந்தை நல குழு உறுப்பினர் | உறுப்பினர் |
| 4 | 3 நகராட்சி உறுப்பினர்கள் (தலைவர் அவர்களால் சுழற்சி முறையில் நியமனம் செய்தல் வேண்டும்) | உறுப்பினர்கள் |
| 5 | மண்டல துணை வட்டாட்சியர் | உறுப்பினர் |
| 6 | உயர்நிலை (அ) மேல்நிலை பள்ளியின் தலைமையாசிரியர் அப்படியில்லையெனில் நடுநிலைப்பள்ளி (அ) தொடக்கப்பள்ளியின் தலைமையாசிரியர் (அ) தொடர்புடைய பள்ளியின் ஆசிரியர் | உறுப்பினர் |
| 7 | இரண்டு குழந்தை பிரதிநிதிகள் (தலைவரால் நியமனம் செய்யப்பட வேண்டும்) | உறுப்பினர்கள் |
| 8 | மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் பிரதிநிதி | உறுப்பினர் |
| 9 | மேற்பார்வையாளர், நிலை I / நிலை II ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் | உறுப்பினர் |
| 10 | மருத்துவ அலுவலர், நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் | உறுப்பினர் |
| 11 | உள்ளூர் காவல் நிலைய குழந்தை நல காவல் அலுவலர் | உறுப்பினர் |
| 12 | இரயில்வே காவல் நிலைய குழந்தை நல காவல் அலுவலர் | உறுப்பினர் |

(த.பி.பா.)

| | | |
|---|---|---|
| 13 | துணை தொழிலாளர் ஆய்வாளர் | உறுப்பினர் |
| 14 | 2 தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் (நகராட்சியில் செயல்படும் தொண்டு நிறுவனத்தின் பிரதிநிதி தலைவரால் நியமனம் செய்யப்பட வேண்டும்) | உறுப்பினர்கள் |
| 15 | நகராட்சியில் செயல்படும் 2 மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள். (தலைவரால் நியமனம் செய்யப்பட வேண்டும்) | உறுப்பினர்கள் |
| 16 | 2 இளைஞர் நல குழு பிரதிநிதி / நேரு யுவகேந்திரா பிரதிநிதிகள் (தலைவரால் நியமனம் செய்யப்பட வேண்டும்) | உறுப்பினர்கள் |
| 17 | குழந்தை பராமரிப்பு நிறுவன பிரதிநிதி (மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலரால் பரிந்துரை செய்யப்படவேண்டும்) | உறுப்பினர் |
| 18 | சைல்டு லைன் பிரதிநிதி | உறுப்பினர் |

**(iii)** மாநகராட்சி மண்டல அளவிலான குழந்தை பாதுகாப்பு குழு

**(Child Protection Committee at Zonal Level in Municipal Corporation)**

| | | |
|---|---|---|
| 1 | மண்டல தலைவர் | தலைவர் |
| 2 | உதவி ஆணையர் | உறுப்பினர் – செயலர் |
| 3 | குழந்தை நல குழு உறுப்பினர் | உறுப்பினர் |
| 4 | 3 மாநகராட்சி உறுப்பினர்கள் (தலைவர் அவர்களால் சுழற்சி முறையில் நியமனம் செய்தல் வேண்டும்) | உறுப்பினர்கள் |
| 5 | மண்டல துணை வட்டாட்சியர் | உறுப்பினர் |
| 6 | உயர்நிலை (அ) மேல்நிலை பள்ளியின் தலைமையாசிரியர் அப்படியில்லையெனில் நடுநிலைப்பள்ளி (அ) தொடக்கப்பள்ளியின் தலைமையாசிரியர் (அ) தொடர்புடைய பள்ளியின் ஆசிரியர் | உறுப்பினர் |
| 7 | இரண்டு குழந்தை பிரதிநிதிகள் (தலைவரால் நியமனம் செய்யப்பட வேண்டும்) | உறுப்பினர்கள் |
| 8 | மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் பிரதிநிதி | உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 9 | குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் / மேற்பார்வையாளர், நிலை I / நிலை II ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் | உறுப்பினர் |
| 10 | மண்டல சுகாதார அலுவலர் | உறுப்பினர் |
| 11 | காவல் நிலைய குழந்தை நல காவல் அலுவலர் | உறுப்பினர் |
| 12 | இரயில்வே காவல் நிலைய குழந்தை நல காவல் அலுவலர் | உறுப்பினர் |
| 13 | துணை தொழிலாளர் ஆய்வாளர் | உறுப்பினர் |
| 14 | 2 தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் (நகராட்சியில் செயல்படும் தொண்டு நிறுவனத்தின் பிரதிநிதி தலைவரால் நியமனம் செய்யப்பட வேண்டும்) | உறுப்பினர்கள் |
| 15 | மாநகராட்சியில் செயல்படும் 2 மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் (தலைவரால் நியமனம் செய்யப்பட வேண்டும்) | உறுப்பினர்கள் |
| 16 | 2 இளைஞர் நல குழு பிரதிநிதி / நேரு யுவகேந்திரா பிரதிநிதிகள் (தலைவரால் நியமனம் செய்யப்பட வேண்டும்) | உறுப்பினர்கள் |
| 17 | குழந்தை பராமரிப்பு நிறுவன பிரதிநிதி | உறுப்பினர் |
| 18 | சைல்டு லைன் பிரதிநிதி | உறுப்பினர் |

4. பணிகள் மற்றும் அடைய வேண்டிய இலக்குகள் பின்வருமாறு:–

- குறைந்தது மூன்று மாதத்திற்கு ஒரு முறையாவது காலமாற்றமின்றி கூட்டம் நடத்தப்பட வேண்டும். (ஜனவரி முதல் மார்ச் வரை, ஏப்ரல் முதல் ஜூன் வரை, ஜூலை முதல் செப்டம்பர் வரை மற்றும் அக்டோபர் முதல் டிசம்பர் வரை ஆகிய காலகட்டங்களில் ஒரு முறையாவது கூட்டம் நடத்தப்பட வேண்டும்).

- கூட்டத்தில் குழந்தைகள் கடத்தப்படுதல், குழந்தை திருமணம், குழந்தை தொழிலாளர், குழந்தை தொழிலுக்காக இடம் பெயர்தல், சுரண்டப்படுதல், சட்டத்திற்கு புறம்பாக குழந்தைகளை தத்து வழங்குதல் மற்றும் குழந்தை பாதுகாப்பை பற்றி கலந்தாலோசித்தல் மற்றும் இதுதொடர்பாக நகர் பகுதிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

- குழந்தைகளை தவறாது பள்ளிக்கு அனுப்ப பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

(த.பி.பா.)

- குழந்தை பாதுகாப்புக்கு ஊறுவிளைவிக்கும் தவறான நடைமுறைகளுக்கு எதிராக செயல்படுதல்.

- குழந்தை பிறப்பு பதிவு, ஆதார் அட்டை பதிவு, பள்ளியில் சேர்த்தல், குழந்தைகளுக்கு காலம் தவறாது தடுப்பு ஊசி போடுதல் மற்றும் மருத்துவ பரிசோதனை செய்தல் போன்ற நல்ல நடைமுறைகளுக்கு ஊக்கம் அளித்தல்.

- குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் இருந்து இல்ல விடுவிப்பு செய்யப்பட்ட பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகள் சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகள் ஆகியோரின் மறுவாழ்வு நடவடிக்கைகளை கண்காணித்தல் மற்றும் உறுதுணையாக இருத்தல்.

- குழந்தை பாதுகாப்பு சேவைகள் (அ) இளைஞர் நீதி நிதி மூலம் நிதி ஆதரவு பெற்ற குழந்தைகளை கண்காணித்தல்.

- அப்பகுதிகளில் நடக்கும் குழந்தைகள் பாதுகாப்புக்கு எதிரான செயல்கள் குறித்து உரிய அதிகார அமைப்புகளுக்கு தெரிவித்தல்.

- கூட்ட அறிக்கையை தயார் செய்தல் மற்றும் தயார் செய்த அறிக்கையை மாவட்ட ஆட்சியரிடம் சமர்ப்பிக்கும் பொறுப்பு குழுவின் உறுப்பினர் செயலரை சார்ந்தது.

- அறிக்கையை கூட்டம் நடைபெற்ற நாளிலிருந்து 10 நாட்களுக்குள் மாவட்ட ஆட்சியரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

- நகர பஞ்சாயத்து, நகராட்சி மற்றும் மாநகராட்சியின் மண்டல குழந்தை பாதுகாப்பு குழுக்களின் கூட்ட அறிக்கையை மூன்று மாதத்திற்கு ஒருமுறை சமூகபாதுகாப்பு இயக்குநரகத்திடம் சமர்ப்பிப்பது மாவட்ட ஆட்சியரின் பொறுப்பு ஆகும்.

- நகர்புறங்களில் குழந்தை பாதுகாப்பை தொடர்ந்து ஆய்வு செய்வது அல்லது கூட்ட அறிக்கையின் மீது தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்காக தகுந்த துறை அலுவலருக்கு இயக்குநரால் தகவல் அனுப்பப்படும்.

- மாவட்ட குழந்தை பாதுகாப்பு குழுவானது நகர பஞ்சாயத்து, நாகராட்சி மற்றும் மாநகராட்சி மண்டல அளவிலான குழந்தை பாதுகாப்பு குழுக்களுக்கு உரிய விழிப்புணர்வு மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை நடத்துவதற்கு ஆவன செய்தல் வேண்டும்.

குழந்தைகள் பாதுகாப்பு குறித்து அடைய வேண்டிய இலக்குகள்

- பத்தாம் வகுப்பு வரை அனைத்து குழந்தைகளும் பள்ளி செல்வதை உறுதிப்படுத்துதல்
- குழந்தைத் தொழிலாளர்கள் அறவே இல்லாமல் உறுதிசெய்தல்

- 100% நோய் தடுப்பு முறைகள் கையாளப்படுதல்
- ஊட்டச்சத்து பற்றாக்குறை இல்லாத கிராமங்களை உறுதிசெய்தல்
- பெண் குழந்தை பிறப்பை கட்டுப்படுத்தும் கருச்சிதைவுகள் நிகழாமல் பார்த்துக் கொள்ளுதல்.
- குழந்தைகளுக்கு தீங்குகள், கொடுமைகள் நிகழாமல் பாதுகாத்தல்.
- கடத்தல் நிகழ்வதைத் தடுத்தல்.
- தீண்டாமையை ஒழித்து சமூக ஒற்றமையை ஏற்படுத்துதல் போன்றவை "நமது கிராமம்" குறிப்பிட்டுள்ள இலக்குகள் ஆகும்.

குழந்தை பாதுகாப்புக் குழு கூட்டங்கள் நடத்துதல் தொடர்பான பொதுவான விதிகள்

- அவசியமான காலங்களில் குழந்தை பாதுகாப்பு குழுவின் தலைவர் அவசர கால கூட்டங்களை நடத்தலாம்.
- குழந்தை பாதுகாப்பு குழுவின் தலைவர் அல்லது உறுப்பினர் அவசரம் என கருதினால் கூட்ட விவாத பொருளாக சேர்க்காத ஏதேனும் ஒரு கூட்ட விவாத பொருளை கூட்டத்தில் முன் வைக்கலாம்.

குழந்தை பாதுகாப்புக் குழுவின் உறுப்பினர் செயலரின் பணிகள்

- குழந்தை பாதுகாப்புக் குழுவின் உறுப்பினர் செயலர் கூட்ட அமைப்பாளராக செயல் புரிந்து காலமுறை கூட்டங்களானது முறையாக நடத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
- ஒவ்வொரு கூட்டத்திற்கான அறிவிப்புகள், அழைப்பிதழ்கள் கடிதங்கள் ஆகியவற்றுடன் நடத்த இருக்கும் கூட்டத்திற்கான விவாத பொருள் குறித்து அனைத்து உறுப்பினர்களுக்கும் முன்கூட்டியே அனுப்புதல் வேண்டும்.
- குழந்தை பாதுகாப்புக் குழுவின் சார்பாக கடிதங்கள் அறிக்கைகள் உரிய துறை அலுவலர்களுக்கு அனுப்புதல் வேண்டும்.
- குழந்தை பாதுகாப்புக் குழுவின் தலைவர் இல்லாத நிகழ்வுகளில் அவரின் கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ. மதுமதி
அரசு செயலாளர்

பெறுநர்
சமூகப் பாதுகாப்பு ஆணையர், சென்னை – 600 010.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
ஆணையர், வருவாய் நிர்வாகம், சென்னை–5.

(த.பி.பா.)

ஆணையர், தொழிலாளர் ஆணையரகம், சென்னை–6.
ஆணையர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–5.
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, சென்னை–15.
இயக்குநர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை–6.
இயக்குநர், குடும்ப நலத் துறை, சென்னை–6.
காவல் துறை இயக்குநர் அலுவலகம், சென்னை–4.

நகல்:-
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை–9.
உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, சென்னை–9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்)
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை செயலர்
அவர்களின் தனிச் செயலர், சென்னை – 9.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட (சந.2) த் துறை, சென்னை – 9
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
28/9/20.